வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-சரவண குமார்

தேதி 10.7.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி ஆஸ்திரியா தலைநகர் வியன்னாவில் அந்நாட்டு சான்சலர் திரு கார்ல் நெஹமரை சந்தித்து இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தினார்.

டெங்கு காய்ச்சல் நிலவரங்களை சமாளிப்பதற்கான தயார் நிலையை மதிப்பிடுவது குறித்து மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு ஜேபி நட்டா இன்று மூத்த அதிகாரிகளுடன் மறுஆய்வு மேற்கொண்டார்.

ரயில் ஓட்டுனர்களின் மன உறுதியை குலைக்கும் வகையில் எதிர்கட்சிகள் பொய்களைப் பரப்பி நாடகமாடுவதாக, ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி குமார் குற்றம் சாட்டி உள்ளார்.

தமிழ்நாட்டில் விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத் தேர்தல் வாக்குப்பதிவு இன்று அமைதியாகவும், விறுவிறுப்பாகவும் நடைபெற்றது.

பிரதமர்

பிரதமர் திரு நரேந்திர மோடி 3 நாள் அரசு முறைப் பயணத்தின் 2-ஆவது கட்டமாக ஆஸ்திரியா தலைநகர் வியன்னாவிற்கு சென்றுள்ளார்.

அந்நாட்டு தலைவர் திரு கார்ல் நெஹமரை இன்று சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பிரதமர் பேச்சு வார்த்தை மேற்கொண்டார். அந்நாட்டு அதிபரை சந்தித்த பிரதமர் திரு நரேந்திர மோடி, இந்தியா-ஆஸ்திரியா நட்புறவு வரும் காலங்களில் வலுப்பெறும் என்றும், மேலும், உலகளாவிய நன்மைக்காக இருநாடுகளும் தொடர்ந்து ஒன்றிணைந்து செயல்படும் என்றும் கூறினார். பின்னர் ஆஸ்திரிய அதிபர் பேசுகையில் தமது நாட்டிற்கு வருகை புரிந்துள்ள பிரதமர் திரு மோடியை வரவேற்பதில் தாம் பெருமை கொள்வதாகவும், இருநாடுகளும் சிறந்த நட்பு நாடுகளாக திகழும் என்றும் கூறினார். கடந்த 41 ஆண்டுகளில் இந்திய பிரதமர் ஒருவர் ஆஸ்திரிய நாட்டிற்கு செல்வது இதுவே முதன் முறை என்பது குறிப்பிடத் தக்கது. மேலும் ஆஸ்திரியாவைச் சேர்ந்த வர்த்தக தலைவர்களுடனும், வியன்னாவில் உள்ள இந்திய சமூகத்தினருடனும் பிரதமர் திரு நரேந்திர மோடி கலந்துரையாடுகிறார். வர்த்தகம் மற்றும் முதலீடு, அறிவியல் மற்றும் தொழில் நுட்பம், பசுமை எரிசக்தி, செயற்கை நுண்ணறிவு, புதிய தொழில்கள், சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றம், கலாச்சால ஒத்துழைப்பு உள்ளிட்ட துறைகளில் இருநாட்டு தலைவர்களும் பேச்சு வார்த்தை நடத்த உள்ளனர். அங்கு பிரதமர் திரு நரேந்திர மேதாடிக்குஇருக்கு இந்திய சமூகத்தினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.மேலும் சர்வதேச சூரிய சக்தி கூட்டணி, பேரிடர் தடுப்பு உள்

கட்டமைப்பு, உயிரி எரிபொருள் உள்ளிட்ட இந்தியாவின் முயற்சிகளில் ஆஸ்திரியாவை பங்கேற்குமாறு அழைத்துள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

பிரதமரின் ஸ்வாநிதி, விஸ்வகர்மா, ஜன்சமர்த் வலைதள கட்டமைப்பு திட்டங்களின் கீழ் ஏழை-எளிய கலைஞர்கள் மற்றும் தெருவோர வியாபாரிகளுக்கு கூடுதல் கடன் வழங்க மத்திய நிதி அமைச்சகம் தனியார் வங்கிகளைக் கேட்டுக் கொண்டுள்ளது. புதுடெல்லியில் மத்திய நிதி சேவை துறை செயலர் திரு விவேக் ஜோஷி தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் ஜன்சமர்த் வலைதளம் மூலம் 13 கடன் திட்டங்களுக்கு நிதி உதவி வழங்கப்படுவதை சுட்டிக் காட்டினார். இந்த கடன் உதவி திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு, நிதி முகாம்களை நடத்தி, சமூகத்தில் பல்வேறு தரப்பினர் பயன் அடைய வங்கிகள் வாய்ப்பு ஏற்படுத்தி தர வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

முத்தரப்பு

இந்தியா, பிரான்ஸ் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்திற்கு இடையே முத்தரப்பு குவி மையக் கூட்டம் காணொளி காட்சி மூலம் இன்று நடைபெற்றது. 2023-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் உருவாக்கப்பட்ட கூட்டு செயல்திட்டத்தின் படியான முத்தரப்பு ஒத்துழைப்பில் இதுவரை எட்டப்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. முத்தரப்பு ஒத்துழைப்பிற்கான துறைகளில்

பொருளாதாரம் உள்கட்டமைப்பு, புதுமையாக்கம், எரிசக்தி, சுற்றுச்சூழல், கல்வி, கலாச்சாரம், மக்கள் நிலையிலான தொடர்புகள் ஆகிய துறைகளும் அடங்கும்.

*நட்டா*

நாட்டில் டெங்கு காய்ச்சலுக்கான தயார் நிலையை மதிப்பிடுவதற்காக மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு ஜேபி நட்டா தமது அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகளுடன் இன்று மறுஆய்வுக் கூட்டம் நடத்தினார். புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், டெங்கு தடுப்பு கட்டுப்பாடு மற்றும் மேலாண்மைக்கான திட்டங்களை அமைச்சகம் தயாரித்து வருவதாகவும், மாநிலங்களுடன் இணைந்து செயல்பட்டு வருவதாகவும் கூறினார். அமைச்சகம் விரைவில் 24 மணி நேரமும் செயல்படும் டெங்கு ஹெல்ப்லைனை தொடங்கும் என்றும், அடுத்த 4, 5 நாட்களில் மாநிலங்களையும் தொடங்குமாறு அவர் தெரிவித்தார். கல்வி, வீட்டுவசதி மற்றும் நகர்புற மேம்பாடு போன்ற அமைச்சகங்களுடன் சுகாதார அமைச்சகம் ஒருங்கிணைந்து செயல்படும் என்றும், அடுத்த 2 நாட்களில் அதிக பாதிப்பு உள்ள மாநிலங்களுடன் தொடர்பு கொள்ள உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். பள்ளிகளுக்கான வழிகாட்டுதல்களை வெளியிட மாநில அரசுகளுடன் இணைந்து சிகிச்சை பிரிவுகளை ஏற்படுத்தவும் 24 மணி நேர சுகாதார வசதிகளை தயார் நிலையில் வைக்க மத்திய மருத்துவ மனைகளுக்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.

*ரயில்வே*

ரயில் ஓட்டுனர்களின் மன உறுதியை குலைக்கும் வகையில் எதிர்கட்சிகள் பொய்களைப் பரப்பி நாடகமாடுவதாக, ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி குமார் குற்றம் சாட்டி உள்ளார். அண்மையில் மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி, புதுடெல்லி ரயில் நிலையத்தில் ரயில் ஓட்டுனர்களை சந்தித்த பின்னர் இவர்களிடம் தினசரி 16 மணி நேரம் வேலை வாங்கப்படுவதாக குற்றம் சாட்டி இருந்தார். திரு ராகுல்காந்தியின் பெயரைக் குறிப்பிடாமல், ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி குமார் இன்று இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசுகையில் ரயில்வே ஓட்டுனர்களின் வேலை நேரம், தொடர்ந்து கண்காணிக்கப் படுவதாகவும் ஒவ்வொரு முறையும் பணிக்கு பின்னர் போதிய ஓய்வு அளிக்கப்படுவதாகவும் தெரிவித்தார். ரயில் ஓட்டுனர்களின் சராசரி பணி நேரம் பரிந்துரைக்கப்பட்ட அளவிற்கு உட்பட்டதாக தொடர்ந்து பராமரிக்கப் படுவதாகவும், கடந்த ஜுன் மாதத்தில் இது, 8 மணி நேரத்திற்கும் குறைவாகவே இருந்ததாகவும் அவர் கூறினார். 2014-ஆம் ஆண்டிற்கு முன்னர் ரயில்களில் ஓட்டுனர் அறை மிகவும் மோசமாக இருந்த நிலையில் தற்போது நவீன இருக்கைகள் உட்பட பல வசதிகள் சேர்க்கப் பட்டுள்ளதாகவும், 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரயில் எஞ்ஜின் கேபின்களில் குளிர்சாதன வசதி செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். பணி இல்லாத நேரங்களில் ஓட்டுனர்கள் ஓய்வெடுக்கும்

அறைகளிலும் தற்போது குளிர்சாதனம், மசாஜ் கருவி உள்ளிட்ட வசதிகள் வழங்கப்படுவதாக அவர் தெரிவித்தார். கடந்த சில ஆண்டுகளில் ஓடும் ரயிலில் பணி புரியும் 34 ஆயிரம் ஊழியர்கள் ரயில்வே துறையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், இத்தகைய மேலும் 18 ஆயிரம் ஊழியர்களை சேர்த்துக் கொள்ள ஆள் சேர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். ரயில் ஓட்டுனர் குடும்பத்தினரின் மன உறுதியை குலைக்கும் முயற்சிகள், தோல்வி அடையும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இடைத் தேர்தல்

தமிழ்நாட்டில் விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று அமைதியாகவும், விறுவிறுப்பாகவும் நடைபெற்றது. பகல் 1 மணி நிலவரப்படி 51 சதவிகித வாக்குகள் பதிவாகி உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப் பதிவு மாலை 6 மணி வரை நடைபெற்றது. திமுக, பாமக, நாம் தமிழர் கட்சி உள்ளிட்ட 11 கட்சிகள் மற்றும் சுயேட்சைகள் என மொத்தம் 29 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். வாக்குப் பதிவு மையங்களில் இணைய வழி கேமராக்கள் பொருத்தப்பட்டு, கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்குவங்கத்தில் 4 தொகுதிகளிலும், இமாச்சல பிரதேசத்தில் 3, உத்தராகண்டில் 2, பீகார், மத்திய பிரதேசம், பஞ்சாப், ஆகிய மாநிலங்களில் தலா 1 தொகுதியிலும் இன்று இடைத்தேர்தல்

நடைபெற்றது. இந்த இடைத் தேர்தல்களில் பதிவாகும் வாக்குகள் வரும் 13-ஆம் தேதி எண்ணப்படுகின்றன.

*பாடப் புத்தகம்*

1 ஆம் வகுப்பு மற்றும் 3- ஆம் வகுப்பிற்கான சிபிஎஸ்இ, பாடப் புத்தகங்களில் மட்டுமே மாற்றம் செய்யப் பட்டுள்ளதாகவும், இதர வகுப்புகளில் அல்ல என்றும் மத்திய இடைநிலை கல்வி வாரியம் தெரிவித்துள்ளது. 1 மற்றும் 3- ஆம் வகுப்பு அல்லாத இதர வகுப்புகளுக்கு, கடந்த கல்வியாண்டில் பயன்படுத்திய அதே பாடப் புத்தகங்களை தொடர்ந்து பயன்படுத்துமாறு பள்ளிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

*புதுச்சேரி-விழிப்புணர்வு*

புதுச்சேரி பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரியின் மனையியல் துறையும், புதுச்சேரி தொழில் துறை மேம்பாட்டு வளர்ச்சி மற்றும் முதலீடு கழகமும் இணைந்து பிரதம மந்திரி மைக்ரோ புட் பிராசசிங் திட்டத்தின் கீழ் கல்லூரி மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் தொழில் மற்றும் வணிக மேலாண்மை இயக்குநர் டாக்டர் ருத்ரகவுடு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். அக்கல்லூரியின் முதல்வர் ராஜி சுகுமார் முன்னிலையில், மனையியல் துறையின் தலைவர் தனலட்சு வரவேற்புரை ஆற்றினார். இந்நிகழ்ச்சியில் 80-க்கும் மேற்பட்ட மாணவ- மாணவியர் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

*புதுச்சேரி- சுற்று சூழல் தினம்*

காரைக்காலில் அமைந்துள்ள தேசிய தொழில் நுட்பக் பல்கலைக் கழகம் புதுச்சேரியில் இன்று காலை உலக சுற்றுச் சூழல் தினத்திற்கு ஏற்பாடு செய்திருந்தது. புதுச்சேரி தேசிய தொழில் நுட்பக் கழகமும், institution of engineers அமைப்பும் இணைந்து நடத்திய இந்த நிகழ்ச்சிக்கு புதுச்சேரி மின்சாரத் துறை செயல் பொறியாளர் திரு கே கே விமல் குமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். முனைவர் எஸ் திருஞானம், கவுரவ விருந்தினராகவும் கலந்து கொண்டார். இந்த ஆண்டு உலக சுற்றுச் சூழல் தினத்தின் தலைப்பு **எங்கள் நிலம்-எங்கள் எதிர்காலம்** என்பதாகும். நிகழ்ச்சியில் கழகத்தின் இயக்குநர் முனைவர் மகரந்த் மாதவ் காங்ரேகர் உரையாற்றுகையில் வருங்கால சந்ததியினருக்காக சுற்றுச் சூழலை பாதுகாப்பதன் முக்கியத் துவத்தை எடுத்துக் கூறினார். மேலும் ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ்வதில் ஆரோக்கியமான சூழலில் முக்கிய பங்கையும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு முயற்சிகளில் இளநிலை மற்றும் முதுநிலை மாணவர்களின் பொறுப்புகளையும் அவர் சுட்டிக் காட்டினார்.

*புதுச்சேரி-நெகிழி*

நெகிழிக்கு மாற்றுப் பொருட்களை விற்பனை செய்யும் வகையில் சோலை அரங்குகளை நிறுவ வேண்டும் என மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் உத்தரவிட்டுள்ளார் புதுச்சேரி அரசு ஒருமுறை

மட்டுமே பயன்படுத்தக் கூடிய நெகிழி பொருட்களின் பயன்பாட்டை தடை செய்துள்ளது. இந்த தடையின் அமலாக்கம் தொடர்பான ஆய்வுக் கூட்டம் உள்ளாட்சித் துறை துணை இயக்குநர் திரு சவுந்தரராஜன் முன்னிலையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் உள்ளாட்சித் துறை, ஊரக வளர்ச்சித் துறை அதிகாரிகள் மற்றும் நகராட்சி கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர்கள் கலந்து கொண்டனர். அரசின் இந்த உத்தரவை மீறுவோர் மீது 10 ஆயிரம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும் என்றும், பொது மக்களுக்கு நெகிழி பொருட்களுக்கு மாற்றுப் பொருட்களை அறிமுகப் படுத்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அறிவுறுத்தினார்.

*உ.பி-வெள்ளம்*

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மண் அரிப்பு காரணமாக விவசாய நிலங்களை இழந்தவர்களுக்கு உத்தரபிரதேச அரசு நிவாரணம் வழங்கும் என்று, அம்மாநில அரசு அறிவித்துள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களான பிலிபிட் மற்றும் லக்கிம்பூர் கிரி ஆகிய பகுதிகளில் அம்மாநில முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் இன்று வான்வழியாக ஆய்வு மேற்கொண்டார். மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை ஆய்வு செய்த அவர், நதிகளின் நீரோட்டத்தை திசைப்படுத்த வேண்டிய தருணம் வந்துவிட்டதாகவும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து தாம் ஆறுதல் கூறியதாகவும்,

தெரிவித்தார். பிலிபிட் மற்றும் லக்கிம்பூர் மாவட்டங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அங்கு ரயில் மற்றும் சாலைப் போக்குவரத்துகள் பெரிதும் சேதம் அடைந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

*உத்தராகண்ட்*

உத்தராகண்ட் மாநிலம் சாமோலி மாவட்டத்தில் பத்ரிநாத் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள பட்டால் சுங்கா லாங்சி சுரங்கப் பாதையில் பெரிய அளவில் இன்று ஏற்பட்ட மணல் சரிவு காரணமாக போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. பத்ரிநாத் கோவிலுக்கு யாத்திரை மேற்கொள்ளும் பக்தர்கள் பாதுகாப்பான இடங்களில் தங்குமாறு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளனர்.

*கிரிக்கெட்*

5 போட்டிகள் கொண்ட டி- 20 கிரிக்கெட் தொடரில் இந்திய ஜிம்பாவே அணிகள் மோதுகின்றன. முன்னதாக இரு அணிகளும் தலா 1 போட்டியில் வெற்றி பெற்றுள்ளன. இன்று ஹராரே ஸ்போர்ட்ஸ் கிளப் மைதானத்தில் மாலை 4.30 மணிக்கு தொடங்கிய 3-ஆவது டி-20 போட்டியில் இந்திய அணி முதலில் பேட்டிங்கை தேர்வு செய்தது. இந்திய அணி ------------ ஓவர்களில், ---------- விக்கெட் இழப்பிற்கு-------ரன்கள் எடுத்துள்ளது.

புதுச்சேரி-நர்சிங்

புதுச்சேரியில் பிஎஸ்ஸி நர்சிங் படிப்புக்கு சென்டாக் மூலம் அரசு ஒதுக்கீடு இடங்களை நிரப்ப வரும் 14-ஆம் தேதி 10 மையங்களில் எழுத்து தேர்வு நடைபெற உள்ளதாக புதுச்சேரி சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் ஸ்ரீராமுலு செய்திக் குறிப்பு வெளியிட்டுள்ளார். மாணவர்கள் தேர்வுக்கான நுழைவுச் சீட்டை சென்டாக் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்றும், மேலும் விவரங்களுக்கு 0413-222-9355 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி ஆஸ்திரியா தலைநகர் வியன்னாவில் அந்நாட்டு சான்சலர் திரு கார்ல் நெஹமரை சந்தித்து இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தினார்.

டெங்கு காய்ச்சல் நிலவரங்களை சமாளிப்பதற்கான தயார் நிலையை மதிப்பிடுவது குறித்து மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு ஜேபி நட்டா இன்று மூத்த அதிகாரிகளுடன் மறுஆய்வு மேற்கொண்டார்.

ரயில் ஓட்டுனர்களின் மன உறுதியை குலைக்கும் வகையில் எதிர்கட்சிகள் பொய்களைப் பரப்பி நாடகமாடுவதாக, ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி குமார் குற்றம் சாட்டி உள்ளார்.

தமிழ்நாட்டில் விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத் தேர்தல் வாக்குப்பதிவு இன்று அமைதியாகவும், விறுவிறுப்பாகவும் நடைபெற்றது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது

-------------------------